# நெல்லை கிழக்கு மாவட்ட பாக முகவர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை, ஆக. 6 -

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. வாக்குச் சாவடி முகவர்களுக்கான (BLA 2) ஆய்வுக்கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்டத்தில் உள்ள அம்பாசமுத்திரம் நாங்குநேரி மற்றும் இராதாபுரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ள ஒன்றிய,நகர மற்றும் பேரூர் கழக வாக்குச் சாவடி முகவர்களுக்கான (BLA2 )ஆய்வுக் கூட்டங்கள் கீழ்கண்ட பட்டியலின்படி நடைபெற உள்ளது. ஒன்றிய,நகர,பேரூர்,கழக செயலாளர் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்திட கேட்டுக்கொள்கிறேன். என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் அறிக்கை விடுத்துள்ளார்.

அதன் படி 08.8.2023, 09.8.2023,10.8.2023 ஆகிய நாட்களில் நடைபெறும் தொகுதி வாரியான நேரம்,இடம், விவரம் வருமாறு.

228இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி மொத்த வாக்குச்சாவடிகள் 306(08.8.2023).

வள்ளியூர் (வடக்கு) ஒன்றியம் காலை 9 மணி எஸ்.ஏ.வி.ஹோட்டல் வள்ளியூர்.

வள்ளியூர்(பேரூர்) காலை 10 மணி வியாபாரி சங்க பொன்விழா மண்டபம் வள்ளியூர்.பணகுடி(பேரூர்)காலை 11 மணி கிரீன் பாயிண்ட் ஹோட்டல் பணகுடி.வள்ளியூர் (தெற்கு)ஒன்றியம் மதியம் 12 மணி புளோரா திருமண மண்டபம் காவல்கிணறு. இராதாபுரம் (கிழக்கு)ஒன்றியம் மாலை 6மணி ராஜா திருமண மண்டபம் இடையன்குடி. இராதாபுரம்(மேற்கு)ஒன்றியம் மாலை 5 மணி மணியம்மை மஹால் இராதாபுரம். திசையன்விளை (பேரூர்)இரவு 7 மணி வைகறை திருமண மண்டபம் திசையன்விளை.

225அம்பாசமுத்திரம் சட்டமன்ற (8.8.2023) தொகுதி மொத்த வாக்குச் சாவடிகள் 294 விக்கிரமசிங்கபுரம்(நகரம்)மாலை 4 மணி நகர கழக அலுவலகம் விக்ரம சிங்கபுரம்.அம்பாசமுத்திரம்(ஒன்றியம்) மாலை 5 மணி ஒன்றிய கழக அலுவலகம் விக்கிரம சிங்கபுரம். மணிமுத்தாறு (பேரூர்)மாலை 6 மணி. அம்பாசமுத்திரம்(நகரம்) இரவு 7 மணி ஹோட்டல் கௌரி சங்கர் அம்பாசமுத்திரம்.

09.08.2023 கல்லிடைக்குறிச்சி(பேரூர்) மாலை 4 மணி பேரூர் கழக அலுவலகம் கல்லிடைக்குறிச்சி. சேரன்மகாதேவி (மேற்கு) ஒன்றியம் மாலை 5 மணி ஒன்றிய கழக அலுவலகம் கல்லிடைக்குறிச்சி.வீரவநல்லூர்(பேரூர்) பாப்பாக்குடி (ஒன்றியம்7 பூத்) மாலை 6 மணி வியாபாரி சங்க கட்டிடம் வீரவ நல்லூர். சேரன்மகாதேவி (கிழக்கு) ஒன்றியம் சேரன் மாதேவி(பேரூர்)இரவு 7 மணி கே.வி.திருமண மண்டபம் சேரன்மகாதேவி.

10.08.2023பத்தமடை (பேரூர்)மாலை 5 மணி பேரூர் கழக அலுவலகம் பத்தமடை. மேலச்செவல்(பேரூர்)மாலை 6மணி பேரூராட்சி தலைவர் இல்லவளாகம் நடக்குரதவீதி மேலச்செவல். கோபாலசமுத்திரம் (பேரூர்) இரவு 7 மணி பேரூர் கழக செயலாளர் இல்ல வளாகம் பிரான்சேரி.

227நாங்குநேரி தொகுதி மொத்த வாக்கு சாவடிகள் 306(09.08.2023)

பாளை(தெற்கு)ஒன்றியம் காலை 10 மணி மாவட்ட கழக அலுவலகம்.பாளை (மத்திய)ஒன்றியம் காலை 11 மணி மாவட்ட கழக அலுவலகம்.பாளை (வடக்கு)ஒன்றியம் மதியம் 12 மணி மாவட்ட கழக அலுவலகம். மூலைக்கரைப்பட்டி பேரூர்)மாலை 4 மணி பேரூர் கழக அலுவலகம். நாங்குநேரி(கிழக்கு)ஒன்றிய மாலை 5 மணி ஒன்றியக் கழக அலுவலகம் பரப்பாடி.நாங்குநேரி(மேற்கு) நாங்குநேரி (பேரூர்)மாலை 6 மணி நாங்குநேரி ஒன்றிய கழக அலுவலகம்.

10.8.2023களக்காடு(நகரம்)காலை 9 மணி பாலாஜி மஹால் பெரியதெரு களக்காடு களக்காடு(தெற்கு) ஒன்றியம் காலை 10 மணி ஒன்றிய கழக அலுவலகம். களக்காடு(வடக்கு)ஒன்றியம் காலை 11 மணி ஒன்றிய கழக அலுவலகம். திருக்குறுங்குடி(பேரூர்)ஏர்வாடி (பேரூர்) மதியம் 12 மணி ஓ.கே.திருமண மண்டபம் ஏர்வாடி.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் இலஞ்சி ஸ்ரீ சாரதாம்பாள் அரங்கில் மாவட்ட அவை தலைவர் சுந்தரமகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.உடன் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன்,வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ, முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா,முத்துப்பாண்டியன் சேக்தாவுது,செல்லத்துரை, ஆறுமுகசாமி,அப்துல் காதர், கனிமொழி,கென்னடி,தமிழ்செல்வன், சாதிர்,ரஹீம்,சாமிதுரை,ராஜேஸ்வரன், ரவிச்சந்திரன்,சமுத்திர பாண்டி கதிர்வேல் முருகன்,எழில்வாணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 5 ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி

# நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் மருத்துவ முகாம்!

## டி.பி.எம்.மைதீன்கான் - டாக்டர் பொன்மணி - சு.சுப்பிரமணியன் பங்கேற்பு!

நெல்லை, ஆக. 8 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5ம் ஆண்டு நினைவு முன்னிட்டு நெல்லை மாநகர திமுக சார்பில் பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லத்துரை ஏற்பாட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் பாளை வ.உ.சி. உள் விளையாட்டு அரங்கில் பாளை பகுதி அவைத் தலைவர் குமாரசுப்பிரமணியன் தலைமையில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், மாநகர அவைத்தலைவர் டாக்டர். பொன்மணி, மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்த முகாம் மூலம் 56 மாற்றுத் திறனாளிகள் பயனடைந்தனர்.

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் பாளையங்கோட்டை வ.உ.சி.உள் விளையாட்டு அரங்கில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக் கான சிறப்பு முகாமில் கார்டியாக நிறுவனர் டாக்டர். இ.அருணாசலம் மற்றும் சக்தி மருத்துவமனை நிறுவனர் டாக்டர். வெங்கடேஷ் பாபு ஆகியோர் பங்கேற்று மாற்று திறனாளிகளுக்கு சிறப்பு பரிசோதனை செய்தனர். இந்த முகாமில் 56 மாற்றுத் திறனாளிகள் உரிய சிகிச்சை பெற்று பயனடைந்தனர்.

இந்நிகழ்வில் மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யா னந்த்,மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், மாநகர பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை, பகுதி செயலாளர் கள் சுப்பிரமணியன் (தச்சை) நமச்சிவாயம் (நெல்லை)

மாவட்டப் பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அஃலிப்மீரான், பகுதி துணை செயலாளர்கள் ஸ்டார் முருகன், கமாலுதீன், மாநகர மகளிர் அணி அமைப்பாளர் சௌந்தரம் முத்துராஜ், ஹமீதா, அனி ராக்லண்ட், மகளிர் தொண்டர் அணி அனித்தா, பவானி, நர்மதா, ரேவதி, வட்ட செயலாளர்கள் பெர்க்மான் பாஸ்கர், பேபி கோபால், அருள் இளங்கோ, ராஜ், கேபிள் குமரேசன்,ஜெயின் உசேன், கதிரேசன், மாநகர பிரதிநிதி சுண்ணாம்புமணி, தகவல் தொழில்நுட்ப அணி சாமுவேல், மாமன்ற உறுப்பினர்கள் பேச்சியம்மாள், சகாய ஜூலியட், சின்னத்தாய், வழக்கறிஞர்கள் சுரேஷ்குமார், சுடலைக்கண்ணு,கழக நிர்வாகிகள் இனியன்,முன்னாள் கவுன்சிலர் ராஜா, ஷெட்டி, குமார், மகாராஜன், தளபதி ஆறுமுகம், பெரியார், ரகுமான்ஷா, செல்வராஜ், ராஜேஷ், வேலாயுதம், ஐயப்பன்,கார்த்திக், இலக்கிய அணி வினோத் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை - சாக்கோட்டை மேற்கு ஒன்றியம் -

# சூரக்குடியில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் நல உதவிகள்!

## கே.ஆர்.ஆனந்த் - பள்ளத்தூர் ரவி - சூரக்குடி பழனியப்பன் - எஸ்.மணிமேகலை பங்கேற்பு!

சிவகங்கை, ஆக. 8 -

தலைவர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு சாக்கோட்டை மேற்கு ஒன்றியம் சூரக்குடி கிராமத்தில் சாக்கோட்டை ஒன்றிய செயலாளர் டாக்டர் ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ். ரவிஆகியோர்தலைமையில் மாவட்ட மகளிர் அணி தலைவி மணிமேகலை, ஊராட்சிசெயலாளர்பழனியப்பன் ஆகியோர் முன்னிலையில் தலைவர் கலைஞரின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்தும் ஏழைகளுக்குஅன்னதானம்வழங்கியும் பொதுமக்களுக்கு வேஷ்டி சேலை வழங்கியும் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆதி திராவிட அணி துணை அமைப்பாளர் கோட்டையூர் சுப்பிரமணியன், நட்புகப்பட்டி பழனியப்பன், சூரக்குடி சொர்ணம், மாவட்டசுற்றுச்சூழல்அணி காஞ்சனா, சூரக்குடி கிளை பிரதிநிதி அ.கண்ணன், நெற்புகப்பட்டி பழனியப்பன், சூரக்குடி சொர்ணம், வி.கிருஷ்ணன், சுரேஷ், முத்து, சாத்தையா, சுப. ராசேந்திரன்உட்படஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு தலைவர் கலைஞருக்கு நினைவஞ்சலி செலுத்தினர்.

மேலும் சாக்கோட்டை மேற்கு ஒன்றியத்தில் கோட்டையூர் அழகாபுரி பள்ளத்தூர் கானாடு காத்தான் கொத்தமங்கலம் உட்பட பல்வேறுஇடங்களில்நினைவஞ்சலிசெலுத்தப்பட்டது.

### அமீரக தி.மு.க. பொறுப்பாளரும் அயலக தமிழர் நல வாரிய உறுப்பினருமான

# எஸ்.எஸ்.மீரானை விருது வழங்கி கவுரவித்த இந்திய தூதரகம்!

## சமூக சேவைக்கு கிடைத்த அங்கீகாரம்!

துபாய், ஆக. 8 -

அமீரக தி.மு.க. பொறுப்பாளரும், தமிழக அரசின் அயலக தமிழர் நல வாரிய உறுப்பினருமான எஸ்.எஸ். மீரா னின் சமூக சேவையை பாராட்டி துபாயில் உள்ள இந்திய தூதரகம் சார்பில் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது.

துபாயில் உள்ள இந்திய தூதரகத்தில் கடந்த ஆகஸ்ட் 1ஆம் தேதி நடைபெற்ற விழாவில் இந்திய தூதர் (பொறுப்பு) ராம்குமார் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தொழிலாளர் விவகார செயலாளர் அப்துல்லா லஷ்காரி ஆகியோர் இந்த விருதை வழங்கினர்.

பணி நிமித்தமாக ஐக்கிய அரபு அமீரகத்திற்கு சென்று அங்கு பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டவர்கள், போலி ஏஜெண்ட்கள் மூலம் துபாய்க்கு சென்று அங்கு ஊதியமும், சாப்பாடு கிடைக்காமல் தவித்தவர்கள் என பலருக்கும் அயலக தமிழர் நல வாரிய உறுப்பினர் என்ற முறையில் எஸ்.எஸ்.மீரான் உதவிக்கரம் நீட்டி வருகிறார்

அதுமட்டுமல்ல துபாயில் உயிரிழக்கும் தமிழ் நாட்டை சேர்ந்தவர்களின் உடல்களை சொந்த ஊருக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளையும் இந்திய தூதரகம் மற்றும் தமிழக அரசு அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து மேற்கொண்டு வருகிறார்.

துபாயில் உள்ள இந்திய தூதரகம் தன்னார்வமாக சமூகநலப் பணிகளில் இந்தியாவை சேர்ந்தவர்கள் ஈடுபடுவதன் மூலம் துபாயில் உள்ள இந்திய தூதரகத்தின் பணிச்சுமை குறைவது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே இவ்விழாவில் அமீரகத்தில் உள்ள பல்வேறு இந்திய முக்கிய பிரமுகர்களும், தொழிலதிபர்களும், சமூக செயற்பாட்டார்களும் கலந்து கொண்டனர்

மேலும் எஸ் எஸ் மீரான் அவர்களுக்கு கடந்த மே மாதத்தில் நியூஸ் 7 செய்தி சேனலில் எழுமின் விருது சமூக சேவைக்காக வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ. சஞ்சீவிராயன்

**ஆகஸ்ட் 8 (2021)**



1964ஆம் ஆண்டு கழகத்தில் உறுப்பினராகி 55 ஆண்டுகளுக்கும் மேலாக கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாவட்டத்தில் எழும்பூர் மற்றும் திரு.வி.க.நகர் பகுதிகளில் 68வது வட்டம், 97வது வட்டம் ஆகிய வட்டச் செயலாளராகவும் மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சிங்கை சா.பழனிவேலு

**ஆகஸ்ட் 8 (2020)**



சிறு வயதிலேயே கழக கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, தனது கீழத்திருப்பாலக்குடி கிராமத்தில், முன்னோடிகளை வைத்து முதன்முதலாக கழகக் கொடியேற்றி, கிளைக் கழகத்தை தொடங்கிய காரணத்தால், ஊர் பெரியவர்கள் ஒன்றுகூடி புளியங்குச்சியால் இவரை அடித்தனர்.

இளம்வயதில் சிங்கப்பூரில் தொழில் புரிந்திட சென்ற காரணத்தால், திராவிட இயக்க தலைவர்களை சிங்கப்பூர் அழைத்து, அங்கு கொள்கைப் பிரச்சாரம் செய்திட வழி செய்ததோடு, ‘தமிழ் முரசு’ ஏடு நடத்தி, தமிழ்மொழியை வளர்த்தவர்.

கழகத் தலைவர் அவர்கள், “தமிழைக் காக்கும் உணர்வுகளுக்கு வழிகாட்டியாக, இவர் போன்ற இலட்சக்கணக்கானோர் இருக்கும் இயக்கம்தான் தி.மு.க.” என இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சு.பெ. நீலகண்டன்

**ஆகஸ்ட் 8 (1999)**



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு, இளமைக் காலம் முதல் கழகத்தில் உறுப்பினராகி, ஆழ்வார்பேட்டை பகுதியில் கழகம் வளர்த்தவர்.

நான்கு முறை வட்டக் கழகச் செயலாளராகவும், வட்ட அவைத்தலைவர், மாவட்ட பிரதிநிதி ஆகிய பொறுப்பு வகித்தவர்.

1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி ஆதிக்க எதிர்ப்பு, சட்டநகல் எரிப்பு, இலங்கை தமிழர் ஆதரவு என கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**